## “ஹனீபா எனும் கொள்கை பாடகரை தி.மு.க.வின் தேசிய பாடகராகவே அழகு பார்த்த இயக்கம் தி.மு.க.”

# சீட்டுக்காகவும் பதவிக்காகவும் புலம்பும் சில்லறைகளே துடைத்து எறியப்படவேண்டியவர்கள்!

இஸ்லாமியர்களுக்கும் தி.மு.க.வுக்குமான உறவு என்பது தேர்தல்,அரசியல் சம்பந்தமான உறவு என்று எளிதாக சொல்லி கடந்துபோக கூடிய உறவல்ல ! அது நான்கு தலைமுறைகளாக தொடரும் ஒரு பந்தம்.ஆனால் தேர்தல் சீட்டுக்காகவும் ,பதவிக்காகவும் ஆசைப்பட்டு தனக்கு வாக்களித்த மக்களை துஷ்ட சக்திகளிடம் அடகு வைக்கும் “நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்கள்”, யாரோ போடும் எலும்புத்துண்டுக்காக தி.மு.க.வை விமர்சித்துக்கொண்டிருக்கிறார்கள்.

போற்றுதலுக்குரிய கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்கள், தான் இறக்கும் தருவாயில் எனக்கு பிறகு இஸ்லாமியர்களை காக்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கிறார் என்று சொன்னபோது பிறந்துகூட இருக்காதவர்கள் இன்று ஒட்டுமொத்த இஸ்லாமியர்களின் பிரதிநிதியாக தன்னை நினைத்துக்கொண்டு தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள தி.மு.க.வை விமர்சிக்கிறார்கள் .

அவர்கள் பேசுவது அவர்களுக்காக “முதல்” போட்டிருக்கும் எஜமானர்களை மகிழ்விக்கலாம் . ஆனால் அது நன்றியோடுள்ள ஒட்டு மொத்த இஸ்லாமியர்களையும் காயப்படுத்தி இருக்கிறது என்பதை உணரவேண்டும். தனக்கு ஆட்சியில் பொறுப்பு வழங்கினால் தி.மு.க.வை விமர்சிக்க வேண்டும் என்கிற ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டதால்தான் இப்படிப்பட்ட கீழ்தரமான விமர்சனங்களைபேசுகிறார்கள்என்பதைஇஸ்லாமியர்கள் அறியாமல்இல்லை. தி.மு.க.வைவீழத்திடநினைத்தவர்கள் வீழ்ந்த கதையை அறிந்தும் இப்படி பேசுவது அந்த பதவிமேல் மேல் உள்ள மோகமே தவிர வேறெதுவும் இல்லை.

இப்படிப்பட்டவர்களுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் சொன்ன ஒரு உதாரணம் இருக்கிறது “ திடீர் என்று சூறைக்காற்றில், குப்பையில் இருந்து பறந்துவந்து கோபுரத்தின் உச்சியில் ஒட்டிக்கொள்ளும் இலை போன்றவர்கள் தற்காலிகமாக அந்த பதவி சுகத்தை அடைவார்கள், காற்று நின்றவுடன் ஒட்டிக்கொண்டவர்கள் மீண்டும் கீழே பழைய இடத்திற்கு திரும்பவேண்டும்.

திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முழக்கமான ஒன்றிணைவோம் வா, வெல்வோம் ஒன்றாக என்கிற அழைப்பை ஆணையாக ஏற்று , இந்தியா முழுவதும் இருந்த இஸ்லாமியர்கள் மட்டுமல்லாது அயல்நாடுகளில் வசித்த இஸ்லாமியர்களும் தமிழ்நாட்டிற்கு தங்களின் சொந்த செலவில் விமானம், ரயில் பஸ் என பயணித்து வந்து, தி.மு.க.வுக்கு வாக்களித்து தனது நன்றிக்கடனை செலுத்தி திரும்பி இருக்கும் செய்தியை இன்று வசனம் பேசுபவர்கள் அறிந்திட வேண்டும்.



**பி.ஜாகிர் உசேன்**
திருவாரூர்

கக்கத்தில் துண்டைசொருகி, காலில் செருப்பு அணியாமல் ஊர் தெருக்களில் ஓரமாக நடக்கவைக்கப்பட்டு , ஒதுக்கி வைக்கப்பட்ட மனிதர்களுக்கு, கக்கத்தில் இருந்த துண்டினை கழுத்தில் போட்டு காலனியோடு தெருக்களில் தலை நிமிர்ந்து நடக்கவைத்து அடுத்த தலைமுறையை கல்வி கற்கவைத்த பெருமை எப்படி நீதிக்கட்சியில் திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடிகளுக்கு இருந்ததோ, அதைப்போல தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் இஸ்லாமியர்களுக்கு 3.5% உள் இட ஒதுக்கீடு வழங்கி தொடங்கி வைத்த அந்த சமூக அங்கீகாரம்தான் தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களை சக மனிதர்களாக வாழ்ந்திட அதிகாரம் அளித்தது.

இஸ்லாமிய மக்களை உருது பேசும் அடிப்படையில் பிரித்தபோது உருது பேசும் முஸ்லீம்களையும் பிற்பட்ட சமூகத்தில் இணைத்து எம்.எஸ். ஜனார்த்தனம் அறிக்கையின்படியிலான இட ஒதுக்கீட்டை உறுதி செய்தது, வேதம் கற்று பள்ளிவாசல்களில் பணிபுரியும் உலமாக்களுக்கு நலவாரியம் அமைத்தது , புனிதப் பயணமான ஹஜ் பயணத்திற்கான எண்ணிக்கையை உயர்த்தியது, சென்னையின் அடையாளமாக விளங்கும் அண்ணாசாலை அரசு கல்லூரிக்கு காயிதே மில்லத் அவர்களின் பெயரை வைத்தது, இன்றைக்கு வக்பு வாரியத்தில் திருத்தம் கொண்டோரின் சூழ்ச்சியைப்போல் அல்லாமல் அன்றைக்கே வக்பு வாரிய கல்லூரிகளை பராமரிக்க, வக்புவாரிய சொத்துக்களை பராமரிக்க நிதி ஒதுக்கீடு போன்றவற்றை கொடுத்த இயக்கம் தி.மு.க. ,

மத மாற்ற தடை என்கிற சட்டத்தின் மூலம் இஸ்லாமியர்களை மறைமுகமாக அழிக்க நினைத்த சக்திகளை முறியடித்து இஸ்லாமியர்களின் திருமண சட்ட திருத்தம் செய்து அவர்களின் திருமணத்திற்கு அங்கீகாரம் அளித்தது, கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்களுக்கு மேலும் பெரும் பெருமை சேர்க்க மணிமண்டபம், “சட்டத்தில் இடமில்லை என்றாலும் நெஞ்சத்தில் இடமிருக்கிறது” என்று உருது அக்காடமி. இவைகள் எல்லாம் தந்து இஸ்லாமியர்களின் ஒட்டுமொத்த நம்பிக்கையை பெற்றிருப்பது தி.மு.க.

உலக தமிழ் மாநாடு நடத்துவதற்கு அலாவுதீன் ஐ.ஏ.எஸ்.அவர்களை நியமித்ததும், காயிதே மில்லத் கல்லூரிக்கென மேடவாக்கத்தில் இடம், சென்னை பல்கலை கழகத்தில் இஸ்லாமிய ஆய்வு மையம், சீறாப்புராணம் எழுதிய அமுத கவி அவர்களுக்கு மணிமண்டபம் இப்படி அடுக்கிக்கொண்டே செல்லும்படியான இஸ்லாமிய வளர்ச்சித்திட்டங்களை தந்தது தி.மு.க.

“சிறுபான்மையினருக்கு ஓர் தீங்கென்றால் அது என் பிணத்தை தாண்டித்தான் நடக்கும்” என்று முழங்கி இஸ்லாமியர்களை காத்த கலைஞர் அவர்களின் வழிவந்த திராவிட நாயகர் மு. க. ஸ்டாலின் அவர்கள்தான் அன்று குடியுரிமை சட்டத்தினை [CAA] எதிர்த்து தடுத்து இஸ்லாமியர்களை காத்தார், இன்றும் வக்பு வாரிய சட்டம் உள்ளிட்டவைகளையும் எதிர்த்து இஸ்லாமியர்களை காத்தும் வருகிறார்.

“கற்பவனாக இரு, அல்லது கற்பிப்பவனாக இரு அல்லது கற்பிப்பவர்களுக்கு உதவி செய்பவனாக இரு, இந்த மூன்றையும் தவிர நான்காவது நபராக கண்டிப்பாக இருந்து விடாதே என்பது நபிகள் நாயகம் சொன்ன வார்த்தை. ஒரு முஸ்லிம் தானும் கல்வி கற்று பிறருக்கும் கல்வி கற்றுக் கொடுப்பதே தான தர்மங்களில் சிறந்ததாகும்” என்று நபிகள் நாயகம் அவர்களின் கருத்தை மேற்கோள் காட்டி மாண்பிற்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றி இருப்பது இஸ்லாமுக்கு அவர் செய்திருக்கும் மரியாதை.

கல்வியையும் காவிச்சாயமாக்கி, தமிழை அழித்து சமஸ்கிருதத்தை புகுத்த, மாநில அரசின் அனுமதி இல்லாமல் ஒன்றிய அரசே பல்கலைக் கழகங்களுக்கு துணை வேந்தர்களை நியமிக்கலாம் என்ற ஒரு வரைவை யு.ஜி.சி. மூலம் கொண்டுவர திட்டமிட்டபோது . யு.ஜி.சி. விதிமுறைகளுக்கு எதிராக சட்டமன்றத்தில் திராவிட மாடல் அரசின் பிதாமகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான் தீர்மானமே நிறைவேற்றினார்.

கருணை ஜமால், எஸ்.ஜே.சாதிக் பாஷா,ஏ. ரஹ்மான்கான், துறைமுகம் உசேன், எஸ்.என்.எம். உபயத்துல்லா, டி.பி.எம்.மைதீன்கான், கே.எஸ்.மஸ்தான், சா.மு.நாசர், வழக்கறிஞர்கள் முகமதுஅலி ஜின்னா , அசன்முகமது ஜின்னா, அப்துல் வஹாப் என நீளும் பட்டியல்கள் வெறும் பெயர்கள் அல்ல, கழகத்தில் எந்த எதிர் பார்ப்பும் இல்லாமல் உழைத்து, கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒளிரும் இஸ்லாமிய நட்சத்திரங்கள் .

இதையெல்லாம்விட, இன்றும் கழக மேடைகளில், அது கழக மாநாடு என்றாலும், பொதுக் கூட்டங்கள் என்றாலும், தெருமுனை பிரச்சாரம் என்றாலும், கடைக்கோடி கழக தொண்டனின் வீட்டில் நடக்கும் நிகழ்வுகள் என்றாலும் “இசைமுரசு நாகூர் ஹனீபா” அவர்களின் கழக பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர் தனக்கு பதவியோ பொறுப்போ வருமென்று எதிர்பாராமல் கழகத்தின் மீதும்,தலைவர் கலைஞர் மீதும் கொண்டிருந்த கொள்கைப்பற்றால் விசுவாசமாக இறுதிவரை இருந்தார். அதனால்தான் நாகூர் ஹனீபா அவர்களை கழகத்தின் தேசிய பாடகராகவே பார்த்தது கழகம்.

அதுமட்டுமா இன்று நம்மிடையே இசைமுரசு நாகூர் ஹனீபா அவர்கள் இல்லை என்றாலும் கூட அந்த ஏக்கத்தை போக்கும் அளவுக்கு “இறையன்பன் குத்தூஸ்” போன்றவர்களின் பாடல்கள் நம்மிடைய ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது என்றால் அது தி.மு.கழகத்தால் இஸ்லாமியர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய அங்கீகாரமாகவே பார்க்கப்படுகிறது !

தி.மு.க.வை அழிப்போம் என்று முழங்கிவர்களுக்கு மலர்வளையம் வைத்து அனுப்பிய இயக்கம் தி.மு.க. என்பதை உணரவேண்டும் . தேர்தலில் இஸ்லாமியர்கள் வாக்குகள் ஏதோ தனக்காகத்தான் என்கிற பொய்யான மமதையில் அலையும் சிலர், அது தி.மு.க. எனும் ஆலமரத்தில் இளைப்பாறும் பறவைகள் செய்த நன்றிக் கடன் என்பதை மறந்து போய் பேசக்கூடாது. நீங்கள் ஒருவர் பேசும் பொய்யாலும் , வீர வசனத்தாலும், இஸ்லாமியர்களின் தொப்புள் கொடி உறவாக தொட்டுத் தொடரும் தி.மு.க. எனும் பாரம்பரிய உறவு விட்டுப்போகாது. நீங்கள் பதவிக்காக எங்கும் தாவலாம் , நாங்களோ வரப்போகும் எங்கள் தலைமுறைகளோ தி.மு.க. எனும் ஆல மரத்தினை என்றைக்கும் உயர்த்திப்பிடிக்கும் விழுதுகளாகவே இருப்போம்.



கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம், வார்டு எண் 54க்குட்பட்ட நீலிகோணம்பாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கிழக்கு மண்டல தலைவர் இலட்சுமி இளஞ்செல்வி கார்த்திக் உள்பட மாமன்ற உறுப்பினர், பகுதி கழகச் செயலாளர், வட்ட கழக செயலாளர் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.

# நாக்பூர் மாணவருக்கு அபுதாபியில் ‘நீட்’ தேர்வு மையம் ஒதுக்கீடு!

## மறுதேர்விலும் நீடிக்கும் குளறுபடிகள்!

நாக்பூர், ஜூன்.22-

இன்று நடைபெறவுள்ள நீட் இளநிலை மறுதேர்வுக்கு நாக்பூரைச் சேர்ந்த மாணவருக்கு அபுதாபியில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த மே 3ம் தேதி நடத்தப்பட்ட நீட் நுழைவுத்தேர்வு, வினாத்தாள் கசிவு உள்ளிட்ட முறைகேடுகள் காரணமாக ரத்து செய்யப்பட்டது. இதற்கான மறுதேர்வு நாளை நடத்தப்படும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. தேர்வின் போது மாணவர்கள் பின்பற்ற வேண்டிய கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்கள் உள்ளிட்டவற்றை தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ளது. தேர்வுக்கான முன்னேற் பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

நீட் தேர்வு இன்று நடைபெறும் நிலையில், நாடு முழுவதும் இதற்கான ஒத்திகை நடத்துகிறது. இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள நீட் இளநிலை மறுதேர்வுக்கு நாக்பூரைச் சேர்ந்த அப்துல்லா முகமது தாலிப் என்ற மாணவருக்கு அபுதாபியில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர் புகார் அளித்ததை தொடர்ந்து, மகாராஷ்டிராவிற்குள் தேர்வு மையம் ஒதுக்குவதாக தேர்வு முகமை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குளறுபடிகளால் ரத்து செய்யப்பட்ட நீட் தேர்வுக்கான மறுதேர்விலும் பல்வேறு முறைகேடுகளில் குளறுபடிகளும் தொடர்வதன் அறிகுறியே இது என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

# பம்மல் வடக்கு பகுதி 31வது வட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

காஞ்சிபுரம், ஜூன்.22-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி 31வது வட்ட செயல் வீரர்கள் கூட்டம், வட்ட செயலாளர் டி.எம். ஜோசப் தலைமையில் நடைபெற்றது.

வட்ட துணை செயலாளர் தி.ச.நடராஜன், தாம்பரம் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் ஆர்.முரளிதரன், வட்ட துணை செயலாளர் ஏ. சேகர், பொருளாளர் மா.விஜய குமார் வட்ட பிரதிநிதிகள், ஆர்.ஸ்ரீதர், என்.முருகானந்தம், பி.கல்யாணகுமார், எம்.செல்வம், கே.சீனிவாசன்

மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ். லாசர், எச்.கே..வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பம்மல் வடக்குப் பகுதிச் செயலாளர் த. ஜெயகுமார் வரவேற்புரை யாற்றினார்.

தாம்பரம் மாநகர அவை தலைவர் - தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், ஆலோசனை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

இதில், பகுதி அவை தலைவர் கே,.சந்திரன், பகுதி துணை செயலாளர் மு. ஸ்ரீதர், மாநகரப் பிரதிநிதிகள் இரா.குமரேசன், இரா.பாபுஜி,

பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஞா.பிரபு, ஆர்.சசிகுமார், எம். ராஜன், எஸ்.ரங்கநாதன் என்.வீராசாமி வி.ராமசாமி எம்.ஏ.பெருமாள், வி. அருள்மொழி, ஏ.ஜெயந்தி, J.மாலதி, சியாமளா, ஆர்.யுவராஜ், டி. எஸ்.ரமேஷ், என்.யுவராஜ், ஆர்.நாகராஜ் ஜெ.சி. ராஜா, இ.மணிகண்டன், இ.முகமது அப்துல்லா, வி.முத்து, டி.வி.ரஜினிரவி, எம்..வெங்கடேஷ், என். பிரேம்குமார், எம்.வசந்த், எஸ்.பிர்லாஸ், பி.எம்.சண்முகம், எம்.விஷ்ணு பிரியன், ஏ.தேவராஜ், எஸ். பாலாஜி, எஸ்.காமராஜ், எஸ்.சஞ்சய், பி.துரை ராஜ், எம்.கோபி, எம்.பாலகிருஷ்ணன், எம்.சுகுமார், ஜெ.ஜெயசீலன், சி.கபிலன், ஜெ.ருக்மணி, ஜெ. ஞானமணி, ஜி.நந்தினி, ஜெ. மாரியம்மாள், கே.சுமித்ரா, ஜி. சித்ரா, வி.அஞ்சலிதேவி ஆர்.அலமேலு, எம். குமுதா, அமுதா, சரோஜா, என்.பொன்னம்மாள், முனியம்மாள், ஆர். வாசுகி, சுந்தரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில், வட்ட இளைஞரணி அமைப்பாளர் கௌதம் விஜயகுமார் நன்றி கூறினார்.

# திருவாரூர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீரா.தேசபந்து மறைவு!

### பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், ஜூன்-22.

திருவாரூர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீரா.தேசபந்து அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த வீரா.தேசபந்து அவர்கள் மன்னார்குடி ஒன்றியம் முக்குளம்சாத்தனூர் ஊராட்சி மன்றத்தின் முன்னாள் தலைவராகவும், தி.மு.க. விவசாய அணி திருவாரூர் மாவட்ட அமைப்பாளருமாக தொடர்ந்து இரண்டுமுறை இருந்து கழகப்பணி ஆற்றியவர் ஆவார்.

வீரா.தேசபந்து அவர்களின் மறைவின் தகவல் அறிந்த மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன், விவசாய தொழிலாளர் அணி மாநில தலைவர் உ.மதிவாணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு இரங்கலை தெரிவித்தனர்.

திருவாரூர் மாவட்ட திமுக சார்பில் மறைந்த வீரா.தேசபந்து அவர்களுக்கு மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்ற இரங்கல் ஊர்வலம் நடைபெற்றது.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆதிரெங்கம் எஸ்.பி. முருகதாஸ்

### ஜூன் 22 (2014)



இளமைக் காலம் முதல் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு திருத்துறைப்பூண்டி பகுதியில் கழக வளர்ச்சியில் பெரும் பங்கெடுத்து, கழகத்திற்கு உறுதுணையாக இருந்தவர்.

கிளைச் செயலாளர், ஒன்றியப் பொறுப்பாளர், ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

ஒன்றியக்குழு உறுப்பினர், ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் கூட்டுறவு வீட்டு வசதி சங்க துணைத் தலைவராகவும் பொறுப்பேற்று பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் தன் உடல்நிலை பாதிக்கப்பட்டபோதும் பங்கேற்று சிறை சென்றவர். தனது பேச்சாற்றலால் கழக அரசின் திட்டங்களை மக்களிடம் எளிதாக கொண்டு சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கோவை மாநகரப் பகுதிகளில் அடுத்தடுத்து

# கல்லூரி மாணவி உட்பட 5 இளம் பெண்கள் மாயம்!

## காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை!

கோவை, ஜூன் 22–

கோவை மாநகரப் பகுதிகளில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக அடுத்தடுத்து கல்லூரி மாணவிகள் உட்பட 5 இளம் பெண்கள் மாயமாகியுள்ளனர். இதுகுறித்து அந்தந்தப் பகுதி காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை ரத்தினபுரியை சேர்ந்தவர் பிரதீக்ஷா (20), இவர் பி.எஸ்சி. தடயவியல் அறிவியல் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். விடுமுறைக்காக வீட்டிற்கு வந்திருந்த பிரதீக்ஷா எப்போதும் அலைபேசியைப் பயன்படுத்திக் கொண்டே இருந்ததாகக் கூறப்படுகிறது. கடந்த 17ம் தேதி இரவு, எப்போதும் அலைபேசி பயன்படுத்துவது குறித்து அவரது தந்தை கண்டித்துள்ளார். இதனால் மனவேதனை அடைந்த பிரதீக்ஷா கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். அவரைத் தேடிச் சென்ற அவரது தம்பி, அக்கா பிரதீக்ஷா அடையாளம் தெரியாத நபர் ஒருவரின் பைக்கில் ஏறிச் சென்றதை பார்த்துள்ளார். அதன் பின்னர் அவரது அலைபேசி சுவிட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது. எங்கு தேடியும் அவர் கிடைக்கவில்லை. இதுகுறித்து புகாரின் பேரில் ரத்தினபுரி காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து அவரை தேடி வருகின்றனர்.

கோவை ஆர்.எஸ்.புரத்தை சேர்ந்தவர் காயத்ரி (25), இவர் கடந்த 18ம் தேதி காலை வேலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டுள்ளார். ஆனால், அவர் வேலை செய்யும் இடத்திற்கும் செல்லவில்லை, மாலையில் வீட்டிற்கும் வரவில்லை. அவரது அலைபேசியும் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து ஆர்.எஸ்.புரம் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து காயத்ரியைத் தேடி வருகிறார்.

போத்தனூர், அமீர் சாஹிப் வீதியைச் சேர்ந்தவர் மேகதா பேகம் (22), இவர், கடந்த 17ம் தேதி மாலை அருகில் உள்ள கடைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றுள்ளார். பின்னர் தனது தாயைத் தொடர்பு கொண்டு, தோழியுடன் பேசுவதாகவும், சில நிமிடங்களில் வந்து விடுவதாகவும் கூறியுள்ளார். ஆனால் இரவு நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. போத்தனூர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் ரவி (43), இவரது மனைவி பூங்கொடி (26), கடந்த 13ம் தேதி மதியம், பூங்கொடி அருகில் உள்ள கோயிலுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றுள்ளார். அதன் பிறகு அவர் வீடு திரும்பவில்லை. இது குறித்து ராமநாதபுரம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

கோவை ஒண்டிபுதூரை சேர்ந்தவர் சுபாஸ்ரீ (25), இவர், வால்பாறையில் பரதநாட்டிய வகுப்புகள் நடத்தி வந்தார். மேலும், கோவையில் வங்கித் தேர்வுக்கான பயிற்சியிலும் ஈடுபட்டு வந்துள்ளார். சுபாஸ்ரீ நெல்லையை சேர்ந்த வாலிபர் ஒருவரை கடந்த நான்கு ஆண்டுகளாக காதலித்து வந்துள்ளார், ஆனால் சுபாஸ்ரீயைத் திருமணம் செய்ய அந்த வாலிபர் மறுத்ததாகத் தெரிகிறது. இது குறித்து பொள்ளாச்சி கோட்டூர் காவல்நிலையத்தில் சுபாஸ்ரீ புகார் அளித்துள்ளார். இந்த நிலையில், கடந்த 17ம் தேதி சுபாஸ்ரீ வீட்டை விட்டுவெளியே சென்றார். அதன் பின்னர் சுபாஸ்ரீ வீடு திரும்பவில்லை. பல்வேறு இடங்களில் தேடியும் அவர் கிடைக்காததால், அவரது தாயார் அளித்த புகாரின் பேரில் சிங்கநல்லூர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து சுபாஸ்ரீயைத் தேடிவருகின்றனர்.

இதுபோன்ற தொடர் சம்பவங்களால் கோவை மக்கள் பெரும் கலக்கத்தில் உள்ளனர்.